



காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம், ”உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் குன்றத்தூர் நகராட்சி அலுவலகத்தில், பல்வேறு இடங்களில் ஆய்வு மேற்கொண்ட பணிகள் குறித்து முதல்நிலை அலுவலர்களுடன் குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் ஆய்வு கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி மோகன், மாவட்ட வருவாய் அலுவலர் செ.வெங்கடேஷ், திருப்பெரும்புதூர் வருவாய் கோட்டாட்சியர் ஐ.சரவணக்கண்ணன், குன்றத்தூர் நகர்மன்றத் தலைவர் கோ.சத்தியமூர்த்தி மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நேற்று (18.12..2024), ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதியரசர் துரைசாமி ராஜு முன்னிலையில் கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை, மாசாணியம்மன் திருக்கோயிலில், அத்திருகோயிலுக்கு காணிக்கையாக வரப்பெற்ற பயன்பாட்டில் இல்லாத 28 கிலோ 906 கிராம் பலமாற்றுப் பொன் இனங்களை உருக்கி, தங்க முதலீட்டுப் பத்திரத்தில் முதலீடு செய்திடும் வகையில் பாரத ஸ்டேட் வங்கியின் பொள்ளாச்சி கிளை மேலாளரிடம் ஒப்படைத்தார். உடன் இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார், பொள்ளாச்சி சார் ஆட்சியர் செல்வி ஏ.கேத்ரின் சரண்யா, இணை ஆணையர்கள் இரா.வான்மதி. பி.இரமேஷ், துணை ஆணையர் விஜயலட்சுமி. உதவி ஆணையர் கைலாசமூர்த்தி, திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் முரளி கிருஷ்ணா, மற்றும் அறங்காவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்

### மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் : ஈரோடு மாவட்டத்தில்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் 2 கோடியாவது பயனாளிக்கு மருந்துப் பெட்டகம் வழங்குகிறார்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, டிச.19-

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் - மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் நேற்று (18.12.2024) சென்னை, சைதாப்பேட்டை, வாழைத்தோப்பு பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் நடைபெறும் திட்டப்பணிகளை ஆய்வு மேற்கொண்டார்கள். பின்னர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

**சி.ஏ.ஜி. அறிக்கை**

சி.ஏ.ஜி. அறிக்கையில் கடந்த கால ஆட்சியில் தரமற்ற மருந்துகள் இருந்ததும், 30% மருத்துவப் பணியாளர்கள் காலிப்பணியிடம் இருந்ததால் மருத்துவ சேவையில் தொய்வு ஏற்பட்டுள்ளதாக CAG அறிக்கையில் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. மருத்துவத்துறை உயரலுவலர்களுடன் இது சம்பந்தமாக கலந்து பேசியிருக்கிறேன். அந்த CAG அறிக்கையில் என்னெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறதோ, கடந்த கால ஆட்சியில் எந்த மாதிரியான குற்றங்கள் சொல்லப்பட்டிருக்கிறதோ, அக்குறைகள் தொடர்பாக ஆய்வு நடத்தி இது சம்பந்தமாக துறை ரீதியான நடவடிக்கைகளுக்கோ, சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்கோ துறையின் சார்பில் பரிந்துரை செய்ய உள்ளோம். அடுத்த வாரம் துறை அலுவலர்களுடன் கலந்தாய்வு கூட்டம் நடத்தப்பட்டு கடந்த கால ஆட்சியில் CAG அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு மேல்நடவடிக்கையாக அரசிற்கு பரிந்து செய்ய உள்ளது.

**மக்களைத் தேடி மருத்துவம் – 2 கோடியாவது பயனாளி**

இன்னொரு மகிழ்ச்சியான செய்தி, 2021 ஆகஸ்ட் திங்கள் 5 ஆம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் தொடங்கி வைக்கப்படும் போது தமிழ்நாடு முதலமைச்சர் சொன்னது, முதல் பயனாளிக்கு மருந்து பெட்டகத்தை தருகிறேன், ஒரு கோடியாவது பயனாளிக்கும் மருந்து பெட்டகத்தை தருகின்ற நிகழ்வு தமிழ்நாட்டில் நடைபெற வேண்டும் என்று சொன்னார்கள், தமிழ்நாடு முதலமைச்சர் சொன்னது மட்டுமல்ல 50 இலட்சமாவது பயனாளிக்கு அவரே வந்து மருந்து பெட்டகத்தை தந்தார்கள், ஒரு கோடியே ஓராவது பயனாளிக்கு அவரே வந்து மருந்து பெட்டகத்தை தந்தார்கள், கடந்த செப்டம்பர் திங்கள் 25 ஆம் தேதி அமெரிக்காவில் உள்ள ஐ.நா சபை பொதுக்கூட்டத்தில் தொற்றா நோய்களுக்காக உலகிலேயே சிறப்பாக செயல்பட்டமைக்கு தமிழ்நாட்டினை தேர்ந்தெடுத்து ஐ.நா சபை விருது வழங்கினார்கள். இந்த நிலையில் நாளை (19.12.2024) தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஈரோட்டில் மக்களைத் தேடி மருத்துவ திட்டத்தில் 2 கோடியாவது பயனாளிக்கு மருந்து பெட்டகத்தை வழங்க உள்ளார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இலட்சியம் ஒரு கோடி பயனாளி இருக்க வேண்டும் என்பது தற்போது அது இரட்டிப்பாகி 2 கோடியே பயனாளிக்கு மருந்து பெட்டகத்தை வழங்க உள்ளார்கள்.

**சைதை தொகுதியில் திட்டப்பணிகள்**

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் சைதாப்பேட்டை பகுதிக்கு வருகை தந்து நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் குடியிருப்புகளை ஆய்வு செய்து, இப்பணிகளை வேகப்படுத்தி தற்போது நிறைவு நிலைக்கு வந்திருக்கின்றது. மின்சார வாரியத்தின் சார்பில் கேபிள் அமைக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 500க்கும் மேற்பட்ட வீடுகளுக்கு தனித்தனி மீட்டர் பொருத்தும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்பணிகளை 10 நாட்களில் முடித்து தருவதாக அதிகாரிகள் தரப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்நிலையில் முதல் வாரம் பயனாளிகளை தேர்வு செய்யும் பணிகள் குலுக்கல் முறையில் நடைபெறவிருக்கிறது. இப்பணிகள் முடிவுற்ற பிறகு, பொங்கல் திருநாளையொட்டி, நானும் அமைச்சர் அவர்களும் இக்குடியிருப்பில் புதுமனை புகுவிழா பொதுமக்களோடு சேர்ந்து நடத்தவிருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு காரணமாக உள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்களுக்கும் சைதை தொகுதி மக்கள் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர்.க.பிரபாகர், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக்குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, வாரிய தலைமை பொறியாளர் சு.லால் பகதூர், மேற்பார்வை பொறியாளர் (கூ.பொ) த.இளம்பரிதி, நிர்வாகப் பொறியாளர் பி.லலிதா, மாமன்ற உறுப்பினர் ஸ்ரீதர் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

## சமூக வலைதளத்தில் வலம் வருவது!





# சென்னைத் தெற்கில் ஒரு மாதம் முழுவதும்

# “உதயநிதியின் உதயநாள்” விழா

364 சொற்பொழிவாளர்கள் பங்கேற்கும்

182 பிறந்தநாள் கூட்டங்களின் “இன்றைய நிகழ்ச்சிகள்”



19.12.2024 - வியாழக்கிழமை

| வ.எண் | சொற்பொழிவாளர்கள் | இடம் | தலைமை |
|---|---|---|---|
| 1. | பேரனாம்பட்டு ராஜேந்திரபிரசாத்<br>இரா.சுதர்ஷனா | 139 வட்டம் – 69வது தெரு, ஆர்.வி.நகர், சைதாப்பேட்டை மேற்கு பகுதி. | பி.எஸ்.முருகன்<br>வட்ட து.செயலாளர் |
| 2. | க.ஒப்பிலாமணி<br>அருணை மா.மதன்குமார் | 129 வட்டம் – தசரதபுரம் பேருந்து நிலையம் அருகில், கலைஞர் நகர் வடக்கு பகுதி, விருகம்பாக்கம் | ஜஹாங்கீர்<br>வி.மே.அணி பகுதி அமைப்பாளர் |
| 3. | மதுரை ஜவகர்<br>த.கவுசல்யா | 180 அ வட்டம் – திருவீதியம்மன் கோவில் திடல், திருவான்மியூர், கிழக்கு கடற்கரை சாலை, வேளச்சேரி கிழக்கு பகுதி | விசாலாட்சி கபிலன்<br>மாமன்ற உறுப்பினர் |
| 4. | ஈகை தனசேகரன்<br>வே.சிவசக்தி | 188 அ வட்டம் – மயிலை பாலாஜி நகர் 2ஆம் பகுதி, சோழிங்கநல்லூர் மேற்கு பகுதி. | நாகராஜ் வெளிநாடு வாழ் இந்தியர் அணி – பகுதி அமைப்பாளர் |
| 5. | நளினி சாரங்கன்<br>அப்துல் வகாப் | 146 வட்டம் – பாரதிதாசன் நகர், ஆலப்பாக்கம், மதுரவாயல் வடக்கு பகுதி. | தினகரன் சண்முகம்<br>த.தொ.அ.மா.துணை அமைப்பாளர் |
| 6. | நெல்லை ரவி<br>ச.கீர்த்தனா | 152 வட்டம் – பெத்தானியா நகர், வளசரவாக்கம், மதுரவாயல் தெற்கு பகுதி. | D.சத்தியசீலன்<br>ஆதித்திராவிட நலக்குழு ப.அமைப்பாளர் |

9444129952

மேற்கண்ட அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு சிறப்பிப்போர் :

மாவட்டத்திற்குட்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள் தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில அளவிலான அணிகளின் நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழகச் செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள். எனவே கழகத் தோழர்கள் பெருந்திரளாக இந்நிகழ்ச்சிகளில் பங்கேற்று சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

**சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.**

அன்புடன் : அமைச்சர் **மா.சுப்பிரமணியன்** B.A., LL.B.,
மாவட்ட கழக செயலாளர், சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.